NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 12 January 2023

# வெப்பத்தை உணரக்கூடிய சிறப்பு சீருடைக்கான யோசனை

வெப்பநிலை அதிகரித்து வரும் நிலையில் வருங்கால தலைமுறையைச் சேர்ந்த சிங்கப்பூர் ஆயுதப் படை வீரர்கள் விவேக சீருடையைப் பெற வாய்ப்புள்ளது. அதிக வெப்பத்தை முன் கூட்டியே உணர்ந்து, கண்காணிக்கும் வகையில் சீருடை அமைந்திருக்கும். அதற்கான உணர்கருவி அந்த சீருடையுடன் இணைக்கப் பட்டு இருக்கும்.

வீரர்கள் எந்த அளவிலான வெப்பநிலையில் உள்ளனர் என்பதை அவர்களின் தளபதிகள் கண்காணித்து ஆபத்தில் சிக்கக்கூடியவர் களை விரைந்து அடையாளம் காண இந்த வசதி கைகொடுக்கும். புதிதாகத் திறக்கப்பட் டுள்ள வெப்பத்தடுப்பு மீள்திறன் மற்றும் செயல்பாட்டு மையத்தின் யோசனைகளுள் இந்த சீருடையும் ஒன்று.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியில் நேற்று இந்த மையம் திறக்கப்பட்டது. சிங்கப்பூர் ஆயு தப் படை, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், டிஎஸ்ஓ தேசிய சோதனைக்கூடம் ஆகியவற் றின் கூட்டுமுயற்சியில் இம்மையம் உருவாகி உள்ளது.



சிங்கப்பூர் ஆயுதப் படை வீரரின் சீருடையில் வெப்பநிலை உணர்கருவி பொருத்தப்பட்டு சோதிக்கப்படுகிறது. **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.